ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2348/23 - 2023 සැප්තැම්බර් මස 05 වැනි අඟහරුවාදා - 2023.09.05

*2348/23 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 05 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு**

**மத்தியஸ்தர்களாக நியமிப்பதற்கான பெயர்குறிப்பிடப்பட்ட வேட்புமனு கோரும் அறிவித்தல்**

*2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க (விசேட வகுதிகளைச் சார்ந்த பிணக்குகள்) மத்தியஸ்த சபைகள் சட்டத்தின் 2 மற்றும் 3 ஆம் பிரிவுகளின்கீழ் அமைச்சரினால் இலக்கம் 2259/11 ஐக் கொண்ட 2021.12.21 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட கட்டளைக்கிணங்க, அதிலுள்ள விசேட மத்தியஸ்த சபைப் பிரதேசங்களுக்கான மத்தியஸ்தர்களைக்கொண்டு மத்தியஸ்த குழாம் சபைகளைத் தாபிப்பதற்காக 1988 ஆம் ஆண்டின் 72 ஆம் இலக்க மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவினால், அதன் 2003 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) மற்றும் (2) ஆம் உப பிரிவுகளின்படி மேற்கொள்ளப்படும் அறிவித்தலாகும்.*

*அதற்கேற்ப, கீழே குறிப்பிடப்படும் விசேட மத்தியஸ்த குழாம் சபைப் பிரதேசங்களில் தனி நபர்களுக்கு அல்லது நிறுவனங்களிடையே மற்றும் தனி நபர்களிடையே அல்லது நிறுவனங்களுக்கிடையே நிதிசார் வியாபார கொடுக்கல்வாங்கல்களின் போது இயல்பாகச் சேர்கின்ற நிதிசார் பிணக்குகளைத் தீர்ப்பதற்காக தாபிக்கப்படும் விசேட மத்தியஸ்த குழாம் சபை(நிதி)களில் தலைவர் மற்றும் மத்தியஸ்தர்களாக செயற்படுவதற்குத் தகைமையுடையவர்களை நியமிப்பதற்கான பெயர் குறிப்பிடப்பட்ட வேட்புமனு கோரப்படுகின்றது.*

- *கொழும்பு நிர்வாக மாவட்டம்*
- *கம்பஹா நிர்வாக மாவட்டம்*
- *கண்டி நிர்வாக மாவட்டம்*
- *மொணராகலை நிர்வாக மாவட்டம்*
- *பொலன்னறுவை நிர்வாக மாவட்டம்*
- *அநுராதபுரம் நிர்வாக மாவட்டம்*


1A - PG 6472 — 126 (2023/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*02.* அந்த விசேட மத்தியஸ்த குழாம் சபையில் உறுப்பினர் மத்தியஸ்தராகச் செயற்படுவதற்கு பெயர் குறிப்பிட்டு வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் போது உரிய விசேட மத்தியஸ்த குழாம் சபைப் பிரதேசத்தில் எந்தவோர் இடத்திலும் இப்பதவியின் கடமைகளைப் புரிய முடியுமான பின்வரும் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள நபர்களின் பெயர்கள் முன்மொழியப்படல் வேண்டும்.

(அ) **35 வயதுக்கும் 75 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.**

(ஆ) (i) குறைந்தது ஐந்து வருடங்கள் தொடர்ச்சியான காலத்துக்கு பதவிநிலை உத்தியோகத்தர் மட்டத்தில் அரச பதவியொன்றை வகிக்கின்ற அல்லது வகித்தவராக இருத்தல் வேண்டும்;

(ii) தனியார் பிரிவில், அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில், வங்கியொன்றில் அல்லது கூட்டுத்தா-பனமொன்றில் சிரேஷ்ட முகாமைத்துவப் பதவியொன்றை வகித்தவராக இருத்தல் வேண்டும்; அல்லது

(iii) ஏதேனும் எழுத்திலான சட்டமொன்றின் ஊடாக அல்லது அதன்கீழ் தாபிக்கப்பட்டு அங்கீகரி-க்கப்பட்ட தொழில்சார் அல்லது உயர்கல்வி அதிகாரசபையொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்சார் அல்லது கல்வித் தகைமையொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்; அத்துடன்

(இ) **சிறந்த உள மற்றும் உடல் ஆரோக்கியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.**

*03.* குறித்த விசேட மத்தியஸ்த குழாம் சபைக்கு மத்தியஸ்தர்களைத் தேர்ந்தெடுத்து நியமிப்பதற்காக மேற்குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள நபர்களின் பெயர்குறிப்பிடப்பட்ட வேட்புமனுக்களை மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பின்வரும் உத்தியோகத்தர்களிடமிருந்து / சபைகளிடமிருந்து / கூட்டுத்தாபனங்களிடமிருந்து / நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றது.

(அ) பெயர் குறிப்பிடப்பட்ட வேட்புமனுக்களை சமர்ப்பிக்கும் நபர் வசிக்கின்ற அல்லது தொழில் புரிகின்ற பிரதேசத்தின் மாவட்டச் செயலாளர் / பிரதேச செயலாளர்கள்.

(ஆ) குறிப்பிடப்பட்டுள்ள விசேட மத்தியஸ்த குழாம் சபையின் பிரதேசமான நிர்வாக மாவட்டங்களினுள்,

(i) தாபிக்கப்பட்டுள்ள அலுவலகங்களின் திணைக்கள / பிரதேச திணைக்களத் தலைவரொருவரான அரச உத்தியோகத்தர் அல்லது மாகாண அரச உத்தியோகத்தர்

(ii) தாபிக்கப்பட்டுள்ள சமயஞ்சார் நிறுவனமொன்றின் அல்லது பாடசாலையொன்றின் தலைவர்

(iii) வதியும் ஓய்வுபெற்ற திணைக்களமொன்றின் அல்லது பாடசாலையொன்றின் தலைவர்கள் மற்றும்

(iv) குறைந்தது ஐந்து (05) வருடங்களினுள் செயற்பாட்டுடன் காணப்படும் பின்வரும் நோக்கங்களுள் ஒன்றை அல்லது அதற்கு மேற்பட்டவற்றுக்காக தாபிக்கப்பட்டுள்ள ஏதேனும் சபையொன்றுக்கு, அமைப்பொன்றுக்கு, அல்லது நிறுவனமொன்றுக்கு:

- சமூகத்தின் கல்விசார், சமயஞ்சார் விழுமியங்களுக்கு அல்லது ஆன்மிக விருத்தியை மேம்படுத்துவதற்காக,
- சமூக நலன்புரியை விருத்திசெய்வதற்கு அல்லது வறுமையை இல்லாதொழிப்பதற்காக, கிராமிய அல்லது சமூக அபிவிருத்தியை மேம்படுத்துவதற்காக,
- கலாசாரத்தை அல்லது விளையாட்டை மேம்படுத்துவதற்காக,
- சுகாதார, உணவு மற்றும் வீடு போன்ற மனிதனின் அடிப்படைத் தேவைகளை ஏற்பாடுசெய்தல் மற்றும் பெற்றுக்கொடுப்பதை நோக்காகக்கொண்ட செயற்றிட்டங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் செயற்பாடுகளை மேம்படுத்தலுக்காக

*04.* மேற்குறிப்பிடப்பட்ட 3 (அ) இன்கீழ் விசேட மத்தியஸ்த குழாம் சபையொன்றில் மத்தியஸ்தராக நியமிப்பதற்கு சேவையில் ஈடுபடும் அல்லது ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களான நபர்களின் பெயர்களை மாத்திரம் முன்மொழிய முடியும் என்பதோடு, 03 (ஆ) இன்கீழ் சேவையில் ஈடுபடும் அல்லது ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களின், மாகாண அரச உத்தியோகத்தர்களின் மற்றும் அரச உத்தியோகத்தர்களல்லாத நபர்களின் பெயர்களை முன்வைப்பதற்கு உரிய பெயர் முன்மொழிபவருக்கு இயலுமை உள்ளது.

05. பெயர்குறிப்பிட்டு முன்மொழியும் மாதிரிப்படிவம்:

(அ) நபர்களினால் பெயர்குறிப்பிடப்பட்ட வேட்புமனு கீழே காட்டப்படும் 'அ' மாதிரிப்படிவத்துக்கு ஏற்ப சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(ஆ) சபை அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் 'ஆ' மாதிரிப்படிவத்துக்கு ஏற்ப பெயர்குறிப்பிடப்பட்ட வேட்புமனுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) மாவட்டச் செயலாளர்களால் / பிரதேச செயலாளர்களால் 'இ' மாதிரிப்படிவத்துக்கு ஏற்ப பெயர் குறிப்பிடப்பட்ட வேட்புமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பெயர்குறிப்பிடப்பட்ட வேட்புமனுவும் தனியான மாதிரிப்படிவத்தில் எழுதப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், அடுத்த பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறு பெயர்குறிப்பிடப்பட்ட வேட்புமனுக்களை சமர்ப்பிப்பவர்களின் பரிந்துரையும் தவறாது அதில் உள்ளடக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

06. பெயர்குறிப்பிடப்பட்ட வேட்புமனுவை சமர்ப்பிப்பவரின் பரிந்துரை காரணங்களின்றிய பரிந்துரையாக இருத்தல் கூடாது. மத்தியஸ்தர்களின் குழாம் சபைக்கு நியமிப்பதற்காக முன்மொழியப்படும் நபரின் தகைமை அல்லது தகைமையீனம் தொடர்பாக உரிய முடிவை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவுக்கு முடியுமானவகையில் உரிய விடயங்களை குறித்த பரிந்துரையில் குறிப்பிடுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக, பெயர்முன்மொழியப்படுபவரின் நிகழ்கால அல்லது முந்தைய தொழில், அந்தத் தொழிலில் பணியாற்றிய அல்லது ஈடுபட்ட காலப்பகுதி / அவரினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் நம்பிக்கைக்குரிய அல்லது பொறுப்புவாய்ந்த பதவி அல்லது அவரினால் ஏதேனும் சமூக சேவையில், சமயஞ்சார் புண்ணிய அமைப்பில், சங்கத்தில், சபையொன்றில் வகிக்கப்பட்ட பதவி இருப்பின் அவற்றையும் குறிப்பிடுதல் வேண்டும்.

07. எவரேனும் தனிநபரொருவர் அல்லது சபையொன்று, அமைப்பொன்று அல்லது நிறுவனமொன்று ஒரே மத்தியஸ்த சபைப் பிரதேசம் தொடர்பில் பெயர்குறித்த வேட்பு மனுக்கள் மூன்றுக்கு மேலதிகமாக சமர்ப்பிப்பதிலிருந்து முடியுமானளவு தவிர்ந்துகொள்ள வேண்டும். எனினும் பிரதேச செயலாளருக்கு / மாவட்ட செயலாளருக்கு இந்த வரையறை ஏற்புடையதாகாது.

08. சகல வேட்புமனுக்களும் **2023 ஐப்பசி மாதம் 31** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் **கொழும்பு 12, அதிகரண மாவத்தை, நீதியமைச்சு புதிய கட்டடம், இலக்கம் 80** எனும் முகவரியில் அமைந்துள்ள **மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் செயலாளருக்குக்** கிடைக்கப்பெறும் வகையில் அனுப்பப்படுதல் வேண்டும்.

09. நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் அடிப்படைத் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர், பயிற்சிக்கான தகைமை உடையவர் என நேர்முகப் பரீட்சைக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் மத்தியஸ்தம் செய்யும் ஆற்றல் மற்றும் நுட்பங்கள் அத்துடன் சட்டம் மற்றும் உரிய துறை குறித்தான பயிற்சிப் பாடநெறியொன்றைக் கற்பதற்காக அனுப்பப்படுவர். பயிற்சிப் பாடநெறியில் தகைமை பெறுபவர்கள் புள்ளிகள் வழங்கப்படும் வரிசைக்கிரமத்துக்கு ஏற்ப மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் தற்றுணிபின் பேரில் மத்தியஸ்தர்களாக நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தகைமைபெற்ற உறுப்பினர்களிலிருந்து ஒருவர் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தலைவராக நியமிக்கப்படுவார்.

10. இந்த அறிவித்தலில் ஏற்பாடு செய்யப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும் மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழுவின் முடிவே இறுதி முடிவாகும்.

**ஏ. எஸ். பீ. வீரசூரிய,**
செயலாளர்,
மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு.

மத்தியஸ்த சபைகள் ஆணைக்குழு அலுவலகம்,
இல. 80, நீதி அமைச்சின் புதிய கட்டிடம், நீதிமன்ற வீதி,
கொழும்பு 12,
2023, செத்தெம்பர் 01.

**படிவம் "அ"**

(பெயர் குறித்த நியமங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தகவுடைய தனியாட்களால் நிரப்பப்பட வேண்டியது.)

1. விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பு:……………………………………………………

2. நிர்வாக மாவட்டம்:………………………………………………………………………

3. பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிக்கும் தனியாட்களின் விபரங்கள்:…………………

(அ) உமது முழுப் பெயர்:………………………………………………………………

(ஆ) உமது வதிவிட தபால் முகவரி:……………………………………………………

(இ) பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிப்பதற்கான உமது தகைமை: …………

(I) நீர் ஓர் திணைக்களத் தலைவரா? அவ்வாறாயின், கீழுள்ள தகவல்களை வழங்கவும்

திணைக்களத்தின் பெயர்:…………………………………………………..

அலுவலக முகவரி:…………………………………………………………

பதவி:……………………………………………………………………

(II) நீர் ஒரு வணக்கத் தலத்தின் தலைவரா அல்லது உள்ளூர் திணைக்களத் தலைவரா? அல்லது பாடசாலைத் தலைவரா? அவ்வாறாயின், கீழுள்ள தகவல்களை வழங்கவும்

அதன் பெயர்:………………………………………………………………

அதன் முகவரி:……………………………………………………………...

பதவி:……………………………………………………………………

(III) நீர் ஓர் ஓய்வுபெற்ற திணைக்களத் தலைவரா அல்லது ஓய்வுபெற்ற பாடசாலைத் தலைவரா? அவ்வாறாயின், கீழுள்ள தகவல்களை வழங்கவும்

அதன் பெயர்:………………………………………………………………

கடைசியாக வகித்த பதவி:…………………………………………….

நீர் வசிக்கும் விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பு (மாவட்டம்):……….

4. உம்மால் பெயர் குறித்துநியமிக்கப்படும் ஆளின் விபரங்கள்:

(அ) அவருடைய முழுப் பெயர்:……………………………………………………....

(ஆ) அவருடைய முகவரி:…………………………………………………………..

(இ) பிறந்த திகதி:……………………………………………………………………

(ஈ) தேசிய அடையாள அட்டை இல:……………………………………………..

(உ) தொலைபேசி இல:…………………………………………………………………

(ஊ) மேற்குறிப்பிட்ட விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பில் அவர் வசிப்பவரா? அல்லது விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு வெளியில் வசிப்பவரா?..........

(எ) இவ்விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் அவர் ஏதேனும் வேலையில் ஈடுபட்டுள்ளாரா? அல்லது பிரதேசத்திற்கு வெளியில் தொழில் செய்பவரா?..........

(ஐ) உமது விதப்புரையை அதற்கான காரணங்களுடன் தருக:……………………...

…………………………………………………………………………………..

கையொப்பம்.
(இலச்சினை இருப்பின்)

திகதி:……………………………

**படிவம் “ஆ”**

(பெயர் குறித்த நியமனங்களைச் செய்வதற்குத் தகவுடைய குழுவின், ஒழுங்கமைப்பின், நிறுவனத்தின் செயலாளரால் நிரப்பப்பட வேண்டியது.)

1. விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பு:…………………………………………………..

2. நிர்வாக மாவட்டம்:…………………………………………………………………

3. பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிக்கும் குழுவின், ஒழுங்கமைப்பின் அல்லது நிறுவனத்தின் விபரங்கள் :-

(அ) அதன் பெயர்:………………………………………………………………….

(ஆ) அதன் பதிவு/ அலுவலக விலாசம்:……………………………………………

(இ) அது பதிவு செய்யப்பட்ட அல்லது தாபிக்கபபட்ட திகதி:………………………

(ஈ) அது உளதாயிருக்கும் காலம்:…………………………………………………...

(உ) அது நிறைவேற்ற அல்லது சேவையாற்ற ஈடுபட்டுள்ள நோக்கங்கள்:…………

……………………………………………………………………………………...

4. பெயர் குறித்து நியமிக்கப்படும் ஆளின் விபரங்கள்:

(அ) அவருடைய முழுப் பெயர்:……………………………………………………

(ஆ) அவருடைய விதிவிட தபால் முகவரி:………………………………………

(இ) பிறந்த திகதி:……………………………………………………………...….

(ஈ) தேசிய அடையாள அட்டை இல:……………………………………………..

(உ) தொலைபேசி இல:……………………………………………………………

(ஊ) மேற்குறிப்பிட்ட விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பில் அவர் வசிப்பவரா? இல்லையெனில் விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு வெளியில் வசிப்பவரா?

…………………………………………………………………………………

(எ) தொழில் தகைமை:……………………………………………………………

(ஏ) இவ்விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் அவர் ஏதேனும் வேலையில் ஈடுபட்டுள்ளாரா? அப் பிரதேசத்திற்கு வெளியில் தொழில் செய்பவரா?:…………..

(ஐ) உமது விதப்புரையை அதற்கான காரணங்களுடன் தருக:……………………

…………………………………………………………………………………..

5. அவருடைய பெயர் குறித்த நியமனத்திற்கு அதிகாரமளிக்கும் தீர்மானமொன்றைக் குழு, ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனம் நிறைவேற்றியுள்ளதா? அவ்வாறாயின், அத்தீர்மானத் திகதி:…………………………………………………………

6. குழு, ஒழுங்கமைப்பு அல்லது நிறுவனத்தின் விதப்புரையை அதற்கான காரணங்களுடன்: …………………………………
…………………………………………………………………………………………………………………

செயலாளரின் கையொப்பம்.
(சபை, அமைப்பு அல்லது நிறுவனத்தின் இலச்சினை).

திகதி:…………………………

**படிவம் "இ"**

**(பெயர் குறித்த நியமனங்களைச் சமர்ப்பிப்பதற்குத் தகவுடைய அரசாங்க அதிபரால் நிரப்பப்பட வேண்டியது)**

1. விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பு:……………………………………………………

2. நிர்வாக மாவட்டம்:……………………………………………………………………..

3. பெயர் குறித்த நியமனத்தைச் சமர்ப்பிக்கும் அரசாங்க அதிபரின் விபரங்கள்:

(அ) உமது முழுப்பெயர்:………………………………………………………………...

(ஆ) உமது அலுவலக விலாசம்:…………………………………………………………...

(இ) நீர் அரசாங்க அதிபராயிருக்கும் நிர்வாக மாவட்டம்:……………………………

4. பெயர் குறித்து நியமிக்கப்படும் அலுவலரின் விபரங்கள் :-

(அ) அவருடைய முழுப் பெயர்:………………………..…………………………

(ஆ) அவருடைய வதிவிடதபால் முகவரி:……………………………………………

(இ) பிறந்த திகதி:………………………………..………………………………

(ஈ) தேசிய அடையாள அட்டை இல:……………………………………………..

(உ) தொலைபேசி இல:………………………………………………………………

(ஊ) மேற்குறிப்பிட்ட விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பில் அவர் வசிப்பவரா? இல்லையெனில் விசேடமத்தியஸ்த சபை இடப்பரப்புக்கு வெளியில் வசிப்பவரா?……………………………………………………………………………………………

(எ) தொழில் தகைமை:……………………………………………………………...

(ஏ) இவ்விசேட மத்தியஸ்த சபை இடப்பரப்பினுள் அவர் ஏதேனும் வேலையில் ஈடுபட்டுள்ளரா? அப் பிரதேசத்திற்கு வெளியில் தொழில் செய்பவரா?…………

(ஐ) உமது விதப்புரையை அதற்கான காரணங்களுடன் தருக:……………………..

……………………………………………………………………………………..

கையொப்பம்.
(இலச்சினை)

திகதி :……………………………..

EOG 09-0043